DEPOSITION OF WITNESS

அரக்கோணம் குற்றவியல் நடுவர் எண்.1 நீதிமன்றம் 2025 ஆம் ஆண்டு ஜீலை மாதம் வெள்ளிகிழமை 04ம் நாள் சாட்சியாகிய கோவர்த்தனன் என்பவரின் வாக்குமூலம் 1983 ஆம் ஆண்டு 10வது சட்ட விதியின்படி திருமதி. K.மம்தா Gr–III பென்ச் கிளார்க், என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | கோவர்த்தனன் | வயது | 71 |
| த/பெ. | சஞ்சீவி | இனம் | ஆண் |
| கிராமம் | பள்ளூர் | தொழில் | வேலையில்லை. |
| சமயம் | | தாலூக்கா | |

**M.C.05/2021**

(மனுதாரர் நீதிமன்றத்தில் ஆஜர். மனுதாரர் வழக்கறிஞர் நீதிமன்றத்தில் ஆஜர்).

**குறுக்கு விசாரணை 04.07.2025 எ.சா.1**

1. நான் எதற்காக எ.சா.ஆ.1 ஆவணத்தை தாக்கல் செய்துள்ளேன் என்றால் மருத்துவமனையில் இருந்ததற்காக தாக்கல் செய்துள்ளேன். 18.02.2009 தேதி நான் மருத்துவ பரிசோதனை செய்ததற்கான ஆவணம் என்றால் சரிதான். அதன் பிறகு மருத்துவ பரிசோதனை செய்ததற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2. 2009ம் வருடத்திற்கு பிறகு நான் ஆரோக்கியமாக இருந்தேன் என்றாலும், அதன் பிறகு பல சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளேன் என்றால் இல்லை. 2008, 2015ம் வருடங்களில் நான் சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளேனா என்றால் நான் கிரையம் பெறவில்லை.

3. தேசிய நெடுஞ்சாலைக்கு சொத்து கையகப்படுத்திய பிறகு அதில் சம்மந்தப்பட்ட சர்வே எண்களில் சொத்து என் பெயரில் உள்ளது என்றால் இல்லை. சொத்து கையகப்படுத்தப்பட்டதற்கு என் பெயரில் ரூ.50 லட்சம் தொகை வைப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் என்னிடம் பணம் எதுவும் இல்லை.

4. எனது மகளுக்கு எப்போது திருமணம் செய்தேன் என்றால் 2009 ம் வருடம். 2018 ம் வருடம் பணம் வந்துள்ள போது 2009 ம் வருடம் எப்படி அந்த பணத்தை திருமண செலவு செய்தேன் என்றால் 2009 ம் வருடம் கடன் வாங்கி திருமணம் செய்தேன். நான் கடன் ஆவணங்களை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் இழப்பீடு தொகைக்கு வருமான வரி செலுத்தியுள்ளேனா என்றால் இல்லை.

5. எனது மகன்கள் பெயரில் நான் சொத்தை எழுதி வைத்ததால் எனது மனைவி கேட்டதால் மனைவி முக்கியம் இல்லை என்று மனுதாரரை வீட்டை விட்டு வெளியேற்றி விட்டேன் என்றால் சரியல்ல. அவராக தான் வீட்டை விட்டு சென்று விட்டார். நான் மனுதாரரின் மகளுக்கு ரூ.15 லட்சம் கட்டணம் கட்டியதற்கு ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மனுதாரரின் மகளுக்கு தான் கட்டணம் கட்டியது இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Taken down by me/before me
in Open Court,
Interpreted/read over
to the witness and admitted by
the deponent to be correct.

Judicial Magistrate No.I,
Arakkonam.